2 பக்கங்கள் 15 காசுகள்

பதிவு எண் எம்: 8798

தீக்கதிர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] நாளிதழ்

கதிர் 13 மதுரை 12—12—75 வெள்ளி மலர் 262

கோதுமையோடு வேகன் மறைந்த மாயம்!

பெங்களூர், டிச. 10—
கர்நாடக மாநில உணவு சிவில்சப்ளை கார்ப்பரேசனுக்கு சொந்தமான ரூ, 50,000 மதிப்புள்ள 220 கோதுமை மூடைகள் வேகனோடு காணவில்லை. 1974-ம் ஆண்டு ஹரியானா, பஞ்சாப்மாநிலங்களில் கர்நாடகமாநில உணவு தேவைக்காக பகிரங்க சந்தையில் கொள்முதல் செய்யப்பட்ட 23,000 டன்கள் கோதுமையில் ஒரு பகுதியே இந்த 220 மூடைகள். 1974-ம் ஆண்டு ரயில்வேமூலம் அனுப்பப்பட்ட இந்த கோதுமைவேகன் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

சர்க்கரை உற்பத்தியை குறைத்தனர்

புதுடெல்லி, டிச. 10—
இந்த ஆண்டின் கரும்பு அறுவைக்கான முதல் மாதமான அக்டோபரில் இந்தியசர்க்கரை ஆலைகள் 33,000 டன்கள் உற்பத்தி செய்தன. கடந்தவருட இதே மாதத்தில் 62,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது.

1975ம் ஆண்டு அக்டோபர் மாதம் கரும்பு ஆலைகள் வசம் கையிருப்பு 8·45லட்சம் டன்கள். இதில்இந்த மாதம் 53,000 டனகள் ஏற்றுமதிக்கும் 3.58லட்சம டன்கள் உள்நாட்டு தேவைக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கு உள்ளது போன்று எதிர்க்கட்சிகளுக்கும்

செயல்படும் சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும்

கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி கோரிக்கை

திருவனந்தபுரம், டிச 9—
நாட்டுக்கு ஏற்படுகின்ற பொதுப்பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காணுவது சம்பந்தமாக தங்களது கருத்துக்களைமக்களிடையே எடுத்துச் செல்வதற்கும் அதன் அடிப்படையில் பிரச்சாரங்கள் நடத்துவதற்கும் ஆளும் கட்சிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளசுதந்திரம் எதிர்க் கட்சிகளுக்கும் கொடுக்கப்படவேண்டும்

—இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின், கேரள மாநிலக்குழு தனது அறிக்கை ஒன்றின்மூலம் கோரியுள்ளது.

நாட்டில் ஏற்படுகின்ற நெருக்கடிகளைத் தீர்ப்பது சம்பந்தமாக ஒவ்வொரு அரசியல் கட்சியும். தனக்குரிய நடைமுறை ஆலோசனைகளை மக்கள் முன்வைப்பதுண்டு.

இவற்றில் எது மிகவும் நல்லது என்று ஆராய்ந்து ஏற்றதைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையை அளிக்கின்ற ஓர் அரசியல் சூழ்நிலையே ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது என்றும்கேரளமாநில மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனது அறிக்கையில் கூறியுள்ளது.

அறிக்கை மேலும் கூறுவதாவது;

ஆளும் கூட்டணியின் முயற்சி

கேரள ஆளும் கூட்டணியை விரிவாக்குவது குறித்து, கூட்டணியின் தலைவர்களுக்கும் கேரளா காங்கிரசின் தலைவர்களுக்குமிடையே நடந்து கொண்டிருக்கின்ற விவாதங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரளமாநிலக் குழு ஆராய்ந்து பார்த்தது.

கேரளாகாங்கிரசைமட்டுமின்றி, ஸ்தாபனக் காங்கிரசையும் என் டி பி கட்சியையும் ஏனைய சில எதிர்க் கட்சிகளையும் ஆளும் கூட்டணியில் சேர்ப்பது சம்பந்தமான ஆலோசனைகளும் ஆளும் கூட்டணியின் வட்டாரங்களில் விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஜாதிய பிரச்சனை சம்பந்தமாக நாயர், ஈழவ சமுதாயத் தலைவர்களுக்கிடையே உள்ள தர்க்கங்களுக்குத் தீர்வுகண்டு, அந்த இருபிரிவினரையும் ஆளும் கூட்டணியின் பின்னால் அணிவகுத்திடச் செய்வதற்கான முயற்சியும் நடந்து கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் நிலை

கேரள அரசியலில் புதிய மாறுதல்கள் வந்து கொண்டிருக்கின்றன என்றும், அதற்கு ஏற்றவாறு செயல்படத் முடைய கட்சியினர் முயலவேண்டுமென்றும், கேரள ஆளும் காங்கிரசின் தலைவர் ஏ கே அந்தோணி உபதேசம் செய்திருப்பது வெளிப்படையான உண்மை.

கேரள மாநிலத்தின் அரசியல் சூழ்நிலை முழுவதையுமே மாற்றுவதற்கான முயற்சிகளில் ஆளும் கூட்டணியினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, அதன் தன்மை [illegible] றி தங்களுக்குள்ள கருத்தினைப் பொதுமக்களிடம் தெரிவிக்க எதிர்க்கட்சிகளுக்கு வசதியில்லாத ஒரு சூழ்நிலை இன்று கேரளத்தில் உள்ளது என்பதை [illegible] ள ஆளும் காங்கிரசின் [illegible] ஏனைய ஆளும் [illegible] யினர் [illegible] மார்க் [illegible] ஸ்ட் கட்சிக்கும், சோசலிஸ்ட் கட்சிக்கும் சாதாரண ரீதியில் தங்களது மாநிலக் குழுக் கூட்டங்களை நடத்த முடியாத ஒரு சூழ்நிலையே இன்று உள்ளது.

ஜனநாயக வாதிகள் ஏற்றுக்கொள்வார்கள்

கேரளா காங்கிரசினருக்குக் கூட, ஆளும் கூட்டணியுடன் கூட்டுசேரவிரும்புகிறவர்களுக்குத்தான் தங்களதுகருத்துக்களைச்சொல்ல உரிமை இருக்கிறது: ஆனால் எதிர்க்கட்சிகளின் பக்கம் உறுதியாக நிற்கவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு தங்களது கருத்துக்களைச்சொல்லவசதி இல்லை.

சுருக்கிச் சொல்லப்போனால், எதிர்க்கட்சிகளில் ஒன்று கூட தனது கருத்தை வெகஜனங்களின் முன் வைத்து — எதிர்க்கட்சிகள் என்ற நிலையில் — நாட்டின் ஜனநாயக நடவடிக்கையில் பங்கேற்க அவற்றுக்கு உரிமையில்லாத ஒரு சூழ்நிலை இருக்குப்படி,கேரள அரசியலில் மாற்றத்தை உண்டாக்குவதற்கான வேலைகளைப் பற்றி ஆளும்கூட்டணியினர் விவாதிக்கின்றனர்.

இது, ஜனநாயக முறையிலான அணுகுமுறையல்ல என்பதை ஆளும் கூட்டணியில் இருப்பவர்கள் உள்பட மாநிலத்தில் உள்ள அனைத்து ஜனநாயக வாதிகளும் ஏற்றுக் கொள்வார்கள் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது.

நாட்டுப்பிரச்னைக்கு தீர்வுகாண வழி என்ன?

இங்குள்ள பிரச்னை எதிர்ககட்சிகளின் உரிமை பற்றிய பிரச்னை மட்டுமல்ல என்பதை ஆளும்கூட்டணிக்குள் உள்ள ஜனநாயகவாதிகளுக்கு நினைவூட்ட விரும்புகிறோம், கேரளம், ஒரு அரசியல் பொருளாதார நெருக்கடியின் நடுவே சென்று கொண்டிருக்கிறது.இதனால் விளைகின்ற பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனில், ஆளும் கட்சிகளுக்கு இருப்பதுபோன்றே, எதிர்க்கட்சிகளுக்கும்செயல்படும் சுதந்திரம் இருக்க வேண்டும். எதிர்க்கட்சியின் வாயைக் கட்டிவிட்டு நாட்டுப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண எந்தநாட்டுஆட்சியாளர்களாலும் இயலாது என்பதை வரலாறு தெளிவாக்கியுள்ளது.

அறிக்கை, மேலும் கூறுவதாவது:

1 மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சோசலிஸ்ட் கட்சி, ஆகியவற்றின் மாநிலக் குழுக்களுக்கும் அதன் கீழுள்ள அமைப்புக்களுக்கும் கூட்டங்கள்நடத்துவதற்கான சௌகரியத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இன்றுள்ள எல்லா தடைகளையும் நீக்கவேண்டும்.

2. கேரளா காங்கிரசிலும் முஸ்லீம் லீக்கிலும்— ஆளும் கூட்டணிக்கு ஆதரவாக உள்ள தலைவர்களுக்குள்ள செயல்படும் சுதந்திரத்தை, அக்கட்சிகளைச் சேர்ந்த—ஆளும் கூட்டணியை எதிர்ப்பவர்களுக்கும் அனுமதிக்க வேண்டும்.

3. ஆரம்பத்தில் சொல்லப்பட்ட, சொல்லப்படாத எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் ஆளும் கட்சிக்குள்ளது மாதிரியான பிரச்சாரசுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும். அதன்மீதான எல்லா கட்டுப்பாடுகளையும் களைய வேண்டும்.

இவ்வாறு, கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. தனது அறிக்கையில் கூறியுள்ளது.

கேரளத்தில் இம்மாதம் 26-ந் தேதி

மக்கள் உரிமை மாநாடு

எதிர்க்கட்சிகள் முடிவு

திருவனந்தபுரம், டிச. 10—
இதுவரை எதிர்க்கட்சியாக இருந்து வந்த கேரளா காங்கிரசை ஆளும்கூட்டணியில் சேர்த்து கேரள அமைச்சரவையை விரிவாக்க ஆளும் கூட்டணி எடுத்துக் கொள்ளும் முயற்சிகளைப் பற்றியும்,மாநிலத்தில் நிலவும் ஏனைய அரசியல் நிகழ்ச்சிகளின் போக்குகள் பற்றியும் இம்மாதம் 5-ந் தேதியன்று திருவனந்தபுரத்தில ஏழு எதிர்க்கட்சிகள் கூடி விவாதித்தன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, சோசலிஸ்ட் கட்சி, ஆளும் கூட்டணியை எதிர்க்கும் முஸ்லிம் லீக், ஸ்தாபன காங்கிரஸ், தேசிய ஆர். எஸ். பி, கேரளசோசலிஸ்ட் கட்சி, ஆகியவற்றின் பிரதிநிதிகளும் காங்கிரசை எதிர்த்து வெளியேறி வந்தவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாநிலத்தில் நிலவும் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளின் அடிப்படையில் ஒரு விண்ணப்பம் தயாரித்து அதை முதலமைச்சருக்கும் போலீஸ் அமைச்சருக்கும் சிறை இலாகா அமைச்சருக்கும் நேரில் சென்று, அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

கேரளத்தின் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளில் பங்கு கொள்ளுவதற்கு ஆளும கட்சிகளுக்கு இருப்பது போன்ற உரிமைஎதிர்க்கட்சிகளுக்கும் இருக்க வேண்டுமென்றும், இந்த உரிமை மீதுள்ள கட்டுப்பாடுகளை களைய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் அரசுக்கு கோரிக்கை விடுத்தது. இது சம்பந்தமான உண்மைகளை விளக்கியும், கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதின் அவசியத்தை வலியுறுத்தியும் அந்த விண்ணப்பம் அமைந்திருந்தது.

அரசுக்கு சமர்பிக்கப்படும் விண்ணப்பத்தில் எழுப்பப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு உதவியாக,பொதுமக்களின் கருத்தைத் திரட்டுவதன் ஒரு பகுதியாக இம்மாதம் 26 ம் தேதியன்று திருவனந்தபுரம் நகரில் மக்கள் உரிமை மாநாடு ஒன்று நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இதற்குத் தேவையான தயாரிப்பு பணிகளை நடத்த பி. விஸ்வம்பரனுக்கும் அமரவிள கிருஷ்ணன நாயருக்கும் பொறுப்புகொடுக்கப்பட்டுள்ளது.

ரொடீசிய வெள்ளை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் உள்நாட்டுப் போர் நிச்சயம்

லண்டன், டிச. 9—
ரொடீசியாவின் வெள்ளை நிற வெறி ஆட்சியாளர்கள் அந்நாட்டு கறுப்பர்களிடம் அதிகாரத்தை மாற்றவில்லையானல், அந்நாட்டில் உள்நாட்டுப் போர் மூளும் என்று பிரிட்டனின் வெளிநாட்டு உதவி அமைச்சர் டேவிட் எல்லன் கூறியுளளார்.

மத்திய ஆப்ரிக்க நாடுகளின் அதிபர்களை சந்தித்துவிட்டு லண்டன் திரும்பிய டேவிட் எல்லன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். ஜாம்பியா நாட்டு ஜனதிபதி கென்னத் கௌண்டா, டான்சானியா ஜனதிபதி ஜூலியஸ் நெய்ரே ஆகியோர் அவரைச் சந்தித்தவர்கள்.

மேலும், "சமாதானமான பேச்சுவார்த்தைக்கான காலம்கடந்து கொண்டிருக்கிறது. விடுதலைக்கான யுத்தத்தை நான் சந்தித்த ஆப்பிரிக்க நாட்டுத் தலைவர்கள் யாரும் விரும்பவில்லை, அவர்கள் அனைவரும் சமாதானமான பேச்சு வார்த்தைகளையே விரும்புகிறார்கள். ஆயுத மோதலைவிட பேச்சுவார்த்தைக்கே முதலிடம் தருகிறார்கள். ஆனால்பேச்சுவார்தத‌ை தோல்வியுறுமானல், உள்நாட்டு யுத்தம் நிச்சயம இருக்கும் என எனக்கு திட்டவட்டமாக உணர்த்திவிட்டார்கள்.ரொடீசியாவின் சட்டப்பூர்வமற்ற ஆட்சியை தோற்கடித்தே தீருவது என்பதில் உறுதி கொண்டுள்ளார்கள் என்றும் பிரிட்டனின் வெளிநாட்டு உதவி அமைச்சர் டேவிட் எல்லன் கூறினர்.

இந்தியஅரசின் மற்றொரு ஏற்றுமதி

நெய், இனிப்புகள் அனைத்தையும்

வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு

மதுரை, டிச. 9—
அமெரிக்கா, பிரிட்டன், மத்தியகிழக்கு நாடுகள், கிழக்கு ஆசிய நாடுகள் ஆகிய நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து நெய், இனிப்பு பண்டங்கள் அனுப்பப்படுமாம இது சம்பந்தமான ஆரம்ப நடவடிக்கைகளை இந்திய அரசின் விவசாய இலாகா எடுத்துள்ளதாம்.

ஏற்றுமதி செய்வதற்கு எவ்வளவு அதிகபட்சமாக நெய்யும் இனிப்பு பண்டங்களும் கிடைக்குமோ அவ்வளவையும் அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமாம்.

நெய், இனிப்பு இவைகளை ஏற்றுமதி செய்வது பற்றி நவம்பர் 21-ல் டெல்லியில் ஒரு கூட்டமே நடத்தப்பட்டதாம். அதில கலந்து கொண்ட மதுரை பால் திட்ட பொது நிர்வாகி தமிழ்நாட்டிலிருந்து 150டன் நெய் அனுப்புவதாக கூறியுள்ளாராம.

பஞ்சாப்மாநிலம் வருடத்திற்கு 1500 டன நெய்யும, இனிப்புகள் ஒரு சில டன்னும ஏற்றுமதிக்கு சப்ளை செய்வதாக கூறியுள்ளது.

பம்பாயில் உள்ள ஒரு தனியார் கம்பெனி ஏற்கெனவே அமெரிககாவுக்கு இனிப்பு பண்டங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறது. அது தனது ஏற்றுமதியை இரு மடங்காக்கப் போகிறதாம.

மானியமும் கோரினர்

தமிழ்நாட்டு சார்பாக கலந்து கொண்ட மதுரை பால்திட்ட பொது நிர்வாகி ஏற்றுமதிக்கான ஆர்டர் வந்துவிட்டால் பால்கோவா என்ற இனிப்புபண்டத்தை அதிக அளவில் ஏற்றுமதி செய்ய முடியும் என்றும சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய நகரங்களில் பால்கோவா ஏராளமாகச் செய்யப்படுகிறது என்றும அங்கிருந்தெல்லாம சேகரித்து ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்யமுடியும என்று கூறிவிட்டுவந்துள்ராம,

மேலும. நெய் இனிப்பு பண்டங்களின் ஏற்றுமதியாளர்களின கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து மாநில பிரதிநிதிகளும ஏற்றுமதி செய்யப்படும நெய்யுக்கும இனிப்பு பண்டங்களுக்கான மானியத்தை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக வேண்டுமென்றும அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளனராம.

நமது பெருமை

உலகத்திலேதிய அதிகமான பசுமாடுகள் உள்ள நாடு இந்தியா; அதே சமயத்தில் உலகத்திலேயே மிகக் குறைவான பால் உபயோகிக்ககூடியவர்கள்இந்தியர்கள் என்ற "பெருமை" நமககு உண்டு.

இந்த நிலையில் நெய்யையும் பாலில் செய்த இனிப்பு பண்டங்களையும் ஏற்றுமதி செய்ய அரசாங்கம் தடபுடலாகநடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய அரசைப் பொறுத்தவரையில் ஏற்றுமதி என்பது உள்நாட்டின தேவைகளை பூர்த்தி செய்தபின் வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்பதல்ல ஏற்றுமதி பெருகிடவேண்டும என்பதே அதன் குறிக்கோள்.

இந்திய நாட்டு மக்கள் பால் சாப்பிடவோ பாலில் செய்யப்பட்ட இனிப்புகள் சாப்பிடவோ தகுதியற்றவர்கள் அல்லர் கடும உழைப்பாளிகள் ஆனல் கோடிககணக்கான மக்களுக்கு, குழந்தைகளுக்கு. வயோதிகர்களுக்கு பாலும சரி, பாலில் செய்யப்பட்ட இனிப்புகளும சரி குதிரைக் கொம்பாக இருக்கும்போது அவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக உள்ளது.

அதுவும் ஏற்றுமதிக்கென எவ்வளவு அதிகபட்சமாக நெய்யும், பாலில் செய்த இனிப்புகளும் கிடைக்குமோ அவ்வளவும் ஏற்றுமதி செய்யப்படுமாம்.

இதன் முடிவு, இந்தியாவின் ஜனத்தொகையில் மிகக்குறைந்த எண்ணிக்கையினரும் உபயோகிகக முடியாத அளவு பாலின் விலை கூடும்.

அரசாங்கம் எடுத்த இம் முடிவை யொட்டியே உள்நாட்டில் ஒருடன் நெய் விலை ரூ. 18 ஆயிரத்திலிருந்து 22 ஆயிரத்துக்கு சென்று விட்டது. அப்படியானல் பாலின் விலையும் கூடத்தானே செய்யும்?

இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த இருதய நோய் மருந்து

அமெரிக்க முதலாளிக்கு உரிமையாகிறது

அலிகார், டிச, 10—
இங்குள்ள முஸ்லீம் பல்கலை கழகத்தின் ரசாயனத் துறைப் பேராசிரியர்கள், நீண்டகாலமாக இருந்து வரும் இருதய நோய்க்கு ஒரு புதிய மருந்தை கண்டுபிடித்தார்கள். ஆனல் அம்மருந்தின் மீதான உரிமை அப்பேராசிரியர்களுக்கு இல்லை. இன்று அந்த உரிமை அமெரிக்க மருந்துக கம்பெனிககுபோய்விட்டது. விலைகொடுத்து வாங்கிவிட்டார்கள்.

அவ்விரு பேராசிரியர்களும் 12 வருட காலமாக ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த மருந்து அது நீண்ட காலமாக இருந்துவரும் இருதய நோய்கு தற்போது டாக்டர்களால் அதிகமாக [illegible] செய்யப்படும ஆட் [illegible] னும் மருந் [illegible] யர்தரமானது-இக்கண்டுபிடிப்பால் மருத்துவ விஞ்ஞானம் மேலும் ஒருபடி உயர்ந்துள்ளது.

அத்தகைய பெருமை வாய்ந்த மருந்து—இந்திய ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டும்- அது இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டுமஇந்தியமககளுககு கிடைப்பதற்கு வழியில்லை.

இப்புதிய கண்டுபிடிப்பை இந்திய அரசு பயன்படுத்தியிருக்கலாம. ஊக்கமளித்திருககலாம.

ஆனல், அக் கண்டுபிடிப்பின் உரிமையை அமெரிகக மருந்துக் கம்பெனியொன்று தட்டிக் கொண்டு சென்று விட்டது இப்படியொரு புதிய கண்டுபிடிப்புக்கு இந்திய அரசின் ஊக்கமும் ஆக்கமும கிடைக்காததால் கண்டுபிடித்தவர்களும தங்களது கண்டுபிடிப்பை விற்பதைத் தவிர வேறு வழி இல்லை.

இருதயநோய்க்கு முதல் தரமான இமமருந்தை ஏகபோகமாக அமெரிக்க கமபெனி உற்பத்தி செய்வதன மூலம உலக முழுவதற்கும விற்பனை செய்து பெருங்கொள்ளை லாபம அடிகக இருக்கிறது.

இந்தியாவில் லட்சக் கணக்கில பணம செலவழித்துபடித்த டாக்டர்களும என்சீனியர்களும இங்கு வேலை கிடைக்காமல வெளிநாடு ஓடுகிறார்கள். டாக்டர்களையும இன்சீனியர்களையும உற்பத்தி செய்வதற்கான செலவுகளை செய்யாமலே அமெரிக்கா, பிரிட்டன் போன்றநாடுகள் இந்தியா போன்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன.

ஆனல். இன்றுஇந்தியாவில் கண்டுபிடித்த ஒரு முக்கியமருந்துக் கண்டுபிடிப்பும் உரிமையும அமெரிக்க முதலாளிகளிடம் விலை போகின்றன.

இம்மருந்தைக் கண்டுபிடித்தவர்கள் பேராசிரியர் மஜீத் சிததிக், டாக்டர் பெக் என்பவர்களாவர்.

நிதி இன்மை,நவீனவிஞ்ஞான ஆய்வுக்கூடம் ஆகியவைகள் இல்லாத காரணத்தால் தான், கண்டுபிடிக்கப்பட்ட மருந்தை, ஆஸ்பத்திரிகளில் உபயோகிப்பதற்கான மருந் [illegible] தாக்க முடியவில்லை என பேராசிரியர் சித்தி[illegible] கூறினர்.

இந்தோனேஷிய உறவை போர்த்துகல் முறித்தது

ஐ நா., டிச. 9—
போர்ததுக்கல் அரசாங்கமானது, இந்தோனேஷிய அரசினோடுகூடிய தனதுராஜிய உறவுகளை டிசம்பர் 8-ந்தேதி வெட்டிக்கொண்டது,

போர்த்துக்கலின் கடைசி காலனிநாடான விடுதலைபெற்ற தைமூர்தீவிற்குள் இந்தோனேசிய பாசிஸ்ட்அரசின் படைகள் நுழைந்து தலைநகர் திலியை கைப்பற்றியதைஎதிர்த்தும, அந்தீவில் அமைந்திருந்த பிரெடிலின் இடதுசாரி அரசாங்கத்தை விரட்டியதை எதிர்த்துமே மேற்கண்ட நடவடிக்கையை போர்த்துக்கல் அரசாங்கம எடுத்துள்ளது.

போர்த்துக்கல் அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தில் இமமுடிவு எடுக்கப்பட்டது.

மேலும, இந்தோனேஷியப் படைகள், தைமூரை ஆக்கிரமிப்பு செய்துள்ளது பற்றி ஐ நா வின பாதுகாப்பு சபை ஒரு அவசரக கூட்டம மேற்கொள்ள வேண்டுமென ஐ நா விற்கான போர்த்துக்கல் தூதுவர் கால்வோ லெலஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும, ஐ நா வின் பொதுக்செயலாளர் வால்தீமையும சந்தித்து இதுபற்றி சந்திததுப் பேசினர்.

வியட்னமிலிருந்து லாவோசுக்கு எரிபொருட்கள்

ஹனோய், டிச 8—
லாவோஸ் மக்கள் குடியரசுக்கு பெட்ரோல், மண்ணெண்ணை போன்ற எரி பொருட்களை அனுப்புவதற்கான தயாரிப்பு வேலைகளில் சோசலிஸ்ட்வியட்னம் ஈடுபட்டுள்ளது. அப்பொருட்கள் வியட்னமின் துறைமுகமான ஹெய்பாங்கிலிருந்து லாவோஸ் மக்கள் குடியரசில் உள்ள வியன்ஷியான் துறைமுகத்திற்கு அனுப்பப்படும, சாலைமார்க்கமாக டிரக்குகளில அனுப்புவதாக இருந்தால் 450 கிலோ மீட்டர் தூரம காடுகளுக்கு இடையே கொண்டுசெல்லவேண்டும. இச்சிரமததைப் போககவே கப்பல்கள் மூலம கொண்டு செல்லப்படுகின்றன.

தீக்கதிர்

மூன்று அவசரச் சட்டங்கள்: மறுபரிசீலனை செய்க

மத்திய அரசு கடந்த 8-ந் தேதியன்று மூன்று அவசரச்சட்டங்களை மிகவும் அவசர அவசரமாகப் பிறப்பித்துள்ளது.

ஒன்று—ஆட்சேபகரமான விஷயங்கள் பிரசுரத் தடுப்பு அவசரச் சட்டம்.

இரண்டு—நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள், உரைகள் முதலியவை பிரசுரிக்கப்படுவதை தடுக்கும் அவசரச் சட்டம்.

மூன்று—['பிரஸ் கவுன்சில்'] பத்திரிக்கை கவுன்சில் கலைப்பு அவசரச் சட்டம்

இந்த அவசரச் சட்டங்கள் ஒவ்வொன்றின் தன்மை என்ன? அவை அவசியமா? என்பது பற்றி இன்று பெரும் கேள்விக்குறி அனைவரின் முன்பும் எழுந்துள்ளது.

ஆட்சேபகரமான விஷயங்கள் பிரசுரத்தடுப்பு அவசரச் சட்டம் இதுபோன்ற சட்டம் 1951—ல் புகுத்தப்பட்டு பின்னர், 1957-ல் வாபஸ் பெறப்பட்டது, ஆனால் இந்தச் சட்டம் மீண்டும் இப்போது கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசியல் சட்டப்பூர்வமாக அமைந்துள்ள அரசாங்கத்துக்கு எதிராக வெறுப்பைத்தூண்டும் வகையிலான செய்திகள் அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தி—மற்றும் விநியோகம் ஆகியவற்றைப் பாதிக்கும்படியான செய்திகள்—சமூகத்தின் பல்வேறு பிரிவு மக்களிடையே வேற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய செய்திகள்—மரியாதைக்குறைவான செய்திகள் ஆகியவற்றை தடுப்பதற்குத்தான் முதலாவது அவசரச்சட்டம். அதாவது அரசாங்கத்தின் குறைபாடுகள்பற்றி சுட்டிக்காட்டக்கூடாது. எழுதக்கூடாது. தொழிலாளர்களது இயக்கங்கள் போராட்டங்கள் பற்றி எழுதக்கூடாது. சுரண்டும் கும்பல் தொழிலாளிவர்க்கத்துக்கு இழைக்கும் கொடுமைகள்பற்றி எழுதக்கூடாது. ஆட்சியிலிருப்பவர்களோ அரசாங்க அதிகாரிகளோ ஒழுங்கீனமாகவோ, ஊழல் மிக்கமுறையிலோ நடந்து கொள்வார்களேயானால் எதுவும் எழுதக்கூடாது. இதுதானே இச்சட்டத்தின் உள்ளடக்கமாக இருக்க முடியும். ஆனால் அரசு அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார், இவ்வாறு சர்க்காரைவிமர்சனம் கூற உரிமைஇருக்கிறதுஎன்றும் அந்தவிமர்சனம் ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார் அது ஆக்கபூர்வமானதா? இல்லையா என்பதை மதிப்பிட மத்திய அரசாங்கத்திடம் முறையிடலாமாம் அதன் பிறகு இதற்கென இனி அமைக்கப்படவிருக்கும் "உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழு விடம் அப்பீல் செய்யலாமாம் இது சம்பிரதாயத்துக்காகத்தான் கூறப்பட்டிருக்கிறதேயொழிய, நடைமுறையில் பாதிக்கப்படுபவர்களுக்கு எந்த வகையில் உதவி கிடைக்கும் என்பதும் விரைவில் நியாயம் கிடைக்குமா என்பதும் சந்தேகாஸ்பதமான ஒன்று.

அடுத்து இரண்டாவது அவசரச்சட்டத்தை எடுத்துக்கொள்ளுவோம்.

நாடாளுமன்றத்தின் அதிகாரப்பூர்வமான நடவடிக்கை பற்றியும் ஆளும் கட்சியையோ அல்லது எதிர்க்கட்சியையோ சார்ந்த ஓர் உறுப்பினரின் பதிவான (நாடாளுமன்றக் குறிப்பில் பதிவு செய்யப்பட்ட உரை) உரையையும் ஆட்சேபகரமான விஷயம் ஏதேனும் இருந்தாலும் பத்திரிகைகள் அட்படியே பிரசுரிக்கலாம். அந்த ஆட்சேபகரமான விஷயம் பற்றி சம்பந்தப்பட்ட உறுப்பினர் மீதோ அல்லது பத்திரிகை மீதோ எவரும் வழக்கு எதுவும் போடமுடியாது. அந்த வகையில் பாதுகாப்பு அளிக்கக்கூடிய நாடாளுமன்ற நடவடிக்கைகள் [பிரசுரப் பாதுகாப்பு] சட்டம் என்ற ஒன்று 1956 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது இச்சட்டம் கொண்டுவருவதற்குகாரணகர்த்தாவாக இருந்தவர். முன்முயற்சி எடுத்தவர் காலம் சென்ற திரு.பெரோஸ் காந்தி ஆவார். அத்தகைய சட்டத்தை ரத்துச் செய்து பிறப்பிக்கப்பட்டுள்ளது தான் இந்த இரண்டாவது அவசரச்சட்டம். பத்திரிகைகளுக்கு ஒரு பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்குவது தான் இந்தச் சட்டம்.

இந்த 1956 ஆம் ஆண்டைய சட்டம் வழங்கும் பாதுகாப்பை பல பத்திரிகைகள் நடைமுறையில் துஷ்பிரயோகம் செய்துள்ளனவாம் நாட்டின் பொதுச் சட்டங்களுக்கு முரண் என்று கருதத்தக்க பலவிஷயங்கள் பத்திரிகைகளில் பிரமாதமாக் பிரசுரமாகி வருகின்றனவாம். இதனால் பத்திரிகைகளின் தரம் குறைந்து விட்டதாம் எனவேதான் இந்தச் சட்டம் ரத்துச் செய்யப்படுகிறதாம்.

இவ்வாறு அரசு அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

அடுத்து மூன்றாவது பத்திரிகை கவுன்சில் கலைப்பு அவசரச் சட்டம்

பத்திரிக்கைக்கு ஏற்படும் பாதிப்பு சம்பந்தமாகவோ, அல்லது பத்திரிகையாலோ அல்லது பத்திரிகை உரிமையாளராலோ ஏற்படும் பாதிப்பு சம்பந்தமாகவோ எழும் பிரச்னைகளை- கோர்ட் விவகாரம் மாதிரி சட்டம் நீதி என்ற அடிப்படையில் பார்க்காமல் 'தர்மநியாயம்' அடிப்படையில் கவனிப்பதற்காக 'பத்திரிக்கை' கவுன்சில் என்று ஒன்று அமைக்கப்பட்டது இது ஒரு மத்தியஸ்த மன்றம் 'மாதிரி பத்திரிகைத்தொழில் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கும் ஒரு ஜனநாயக ரீதியிலான தீர்வுகாணுவதற்காக அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு, பத்திரிகை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள் எழுத்தாளர்கள உரிமையாளர்கள், நிர்வாகிகள், அரசுப் பிரதிநிதிகள் மற்றும் சிலரும் இதில் உள்ளனர். அத்தகைய மன்றம் இனி தேவையில்லை என்று கலைத்துவிடும் அவசரச்சட்டம், இச்சட்டப்படி இம்மாதம் 31-ந் தேதிக்குப் பிறகு பத்திரிகை கவுன்சில் கலைக்கப்படுகிறது அதன் பிறகு பத்திரிகைத் தொழில் சம்பந்தமான சகலவிவகாரங்களிலும் பிரச்சினைகளிலும் அரசாங்கமே நேரடியாகத் தலையிடும். இவ்வாறு கலைக்கப்படுவது அவசியமா? அதன் நடவடிக்கைகள் சரியாக இல்லையென்றால் திருத்தக்கோரலாம், அல்லது அக்கவுன்சிலை திருத்தி அமைக்கலாம். மாறாக, இவ்வாறு அக்கவுன்சிலையே கலைப்பது என்பது எந்தவகையில் நியாயம்?

இங்கு குறிப்பிட வேண்டிய மிக முக்கியமானது என்னவெனில், இம்மூன்று சட்டங்களும் அவசரநிலையை முன்னிட்டும் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் அல்ல. மாறாக அவசரச் சட்டங்கள் வரும் ஜனவரி முதல்வாரத்தில் கூடப்போகின்ற நாடாளுமன்றத்தின் முன்வைத்து ஆளும் காங்கிரசின் மிருக பலத்தின் வாயிலாக ஒப்புதல் பெற்று நிரந்தரச் சட்டங்களாக்கப்பட்டு விடும். அவசரநிலைப்பிரகடனம் என்றாவது ஒருநாள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டாலும் இச்சட்டங்கள் நிரந்தரச் சட்டங்களாகவே நீடிக்கும். எப்போதும் அமுலில் இருக்கும்.

பொதுவாகக் கூறுமிடத்து மாற்றுக்கருத்துக்களுக்கு இடமிருக்குமா என்பது சந்தேகமே பத்திரிகைகள் சுதந்திரமாகக் செயல்பட முடியுமா? முடியாதா? என்ற கேள்விக்கணைகளை இம்மூன்று அவசரச் சட்டங்களும் தொடுத்துள்ளன. விரிந்து பரந்தஜனநாயகம் நிலவுவதாகக்கூறப்படும் நம் நாட்டில் இத்தகையதொரு நிலைமை உருவாவது ஆரோக்கியமானது தானா? எனவே இம்மூன்று அவசரச்சட்டங்கள் சம்பந்தமாக மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

கம்யூனிஸ்ட், நடுநிலை நாடுகளுடன் பலமான உறவே வெளிநாட்டுக் கொள்கை

லாவோஸ் மக்கள் குடியரசு அறிவிப்பு

வியன்ஷியான், டிச 9—

கம்யூனிஸ்ட் நாடுகளுடன்நட்பும் மூன்றாவது உலக நாடுகளுடன் உறவை பலப்படுத்துவதை தேவையாகவும் கொண்டதே புதிய லாவோஸ் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை என லாவோசின் மக்கள் குடியரசு அறிவித்துள்ளது.

"லாவோஸ் மக்கள் குடியரசின் நடவடிக்கை திட்ட" த்தில் குறிப்பிடப்பட்டவெளிநாட்டுக் கொள்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சமாதானத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும், உண்மையான நடுநிலைமைக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் உலகின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக, தென்கிழக்கு ஆசியாவில் நடைபெறும் போராட்டங்களை லாவோஸ் மக்கள் குடியரசு ஆதரிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சமாதான சகவாழ்வு அடிப்படையில் அனைத்து நாடுகளுடனும் ராஜிய உறவுகளை பலப்படுத்தவும் வர்த்தகங்களையும் லாவோஸ் மேற்கொள்ளும். அதேசமயத்தில் 3வது உலக நாடுகளுடன் தனது நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளும்; அதனைப் பலப்படுத்திக் கொள்ளும்என்றும் அத்திட்டத்தில் கூறியுள்ளது.

நடுநிலை நாடுகளின் இயக்கங்களிலும் ஐ நா. சபை சர்வதேச ஸ்தாபனங்கள் ஆகியவைகளின் நடவடிக்கைகளிலு லாவோஸ் மக்கள் குடியரசு ஊக்கத்துடன் செயல்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், லாவோசின் நலனை சர்வதேசிய நிலையில் விரிவு படுத்தவும் அதனைபலப்படுத்தவும், முற்போக்குமக்களின், அரசாங்கங்களின் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கவும் லாவோஸ்மக்கள் குடியரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் அவர்குறிப்பிட்டார்.

கப்பல் முதலாளிகளை காக்க பி. எல். 480

வாஷிங்டன், டிச. 8—

அமெரிக்காவின் பி.எல். 480 என்ற விதியின் கீழ் அந்நாட்டிடமிருந்து கோதுமை இறக்குமதி செய்தால், அக்கோதுமையின் பாதியை அமெரிக்க கப்பல் மூலம் தான் கொண்டுவர வேண்டும். இது பி. எல். 480-ன் ஒரு அம்சமாகும்.

ஏனெனில், அமெரிக்க அரசாங்கத்தின் மானியமோ அல்லது அமெரிக்க அரசாங்கத்தின் மூலம் சரக்குகளை அன்னிய நாடுகளுக்கு ஏற்றிச் செல்லும் வாய்ப்புகளோ இல்லை யெனில் கப்பல் கம்பெனிகள் மூழ்கி விடும்.

இதனால், இந்தியா போன்ற வளர்ச்சியடையும் நாடுகள் தானியத்திற்காக அமெரிக்காவிடம் தொண்ணுந்து கொண்டிருப்பதால், அந்நாடுகளின் தலையில் பி. எல். 480 விதி கட்டப்படுகிறது.

தன்னிடம் கோதுமை வாங்கும் வளர்ச்சியடையும நாடுகளைதன் கட்டுப்பாட்டுக்குள் போட்டுக்கொள்வதற்கு மட்டுமெல்லாமல் தன்னுடைய கப்பல் முதலாளிகளையும் கொழுக்க வைக்க பி. எல். 480 ஐ பயன்படுத்திக்கொள்கிறது அமெரிக்க ஏகாதிபத்திய அரசாங்கம்.

தமிழ்நாடு கடலை விவசாயிகள் சிறப்பு மாநாடு

ஒட்டன் சத்திரம், டிச. 8—

தமிழ்நாடு கடலை விவசாயிகள் சிறப்பு மாநாடு கடந்த 27, 28 தேதிகளில் பழனித் தாலுகா ஒட்டன் சத்திரத்தில் தியாகி வெங்கிடாசலம அரங்கில் வெகு சிறப்பாக நடந்தது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் தோழர் ஆர் ராமராஜ் தலைமை வகித்தார். வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் எஸ். கருப்பணன் அனைவரையும வரவேற்றார்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும கடலை விவசாயம செய்யும் ஏராளமான விவசாயிகள் இம்மாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக வந்து கலந்து கொண்டனர்.

மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக, மதுரை—முகவை மாவட்ட விவசாயிகள் சங்கத்தலைவர் தோழர் கே பி ஜானகியம்மாள் விவசாயிகள் சங்கக் கொடியை ஏற்றிவைத்தார். அதன்பிறகு விவசாயிகள இயக்கத்தில பங்குகொண்டு தமதுஇன்னுயிரை ஈந்த தியாகிகளுக்கும் அவசரநிலைக்குப்பின் 'மிசா' வின் கீழ்கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது உயிரிழந்த மத்தியபிரதேச சி ஐ டி யூ தலைவர் தோழர் வைரவ் பாரதியா அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநில விவசாயிகள் சங்கத்தின் சார்பில், அதன் உதவிச் செயலாளர் தோழர் என் வரதராஜன் கடலை விவசாயிகளின் நிலைமை குறித்தும் அவர்கள துநியாயமான கோரிக்கைகளை விளக்கியும் ஓர் அறிக்கை சமர்பித்தார். அதன் மீது ஏராளமான பிரதிநிதிகள் விவாதம் நடத்திசெழுமைப்படுத்தினர் விவாதங்களையெல்லாம் தொகுத்து நீண்டதோர் தீர்மானமாக மாநில விவசாயிகள் சங்கச் செயலாளர் தோழர் கோ வீரய்யன் சமர்ப்பித்தார். மற்றும் இன்றைய அரசியல்நிலைகள் பற்றிய தீர்மானமும, இதர கோரிக்கைகள் பற்றிய தீர்மானமும் முன் வைக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

என். சங்கரய்யா சிறப்புரை

அகில இந்திய விவசாயிகள் சங்க துணைச்செயலாளர் தோழர் என். சங்கரய்யா இம்மாநாட்டில்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சிஐடியூ சார்பில் எஸ் ஏ தங்கராஜனும், ஜனநாயக மாதர் சங்க சார்பில் கே.பி ஜானகியம்மாளும் வாழ்த்துரை வழங்கியபின், மதுரை — முகவை மாவட்ட விவசாயிகளசங்கச் செயலாளர்தோழர் வி ஏ கருப்புசாமி நன்றியுரை கூறினர்.

பொது மாநாடு

மாநாட்டின் இரண்டாவது நாளான 28 ந் தேதி மாலை 6 மணிக்கு கடைத்தெருவில் நடந்த பொது மாநாட்டுக்கு தோழர் வி ஏ. கருப்பசாமி தலைமை வகித்தார்.

மாநாட்டுத்தீர்மானங்களையும் கோரிக்கைகளையும் விளக்கி தோழர்கள் கே.பி. ஜானகியம்மாள், கோ.வீரய்யன், என். வரதராஜன், ஆர் வரதராஜன் ஆகியோரும் இன்றைய அரசியல்நிலை குறித்து தோழர் என். சங்கரய்யாவும உரையாற்றினர் மதுரை தியாகி மணவாளன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும நடந்தது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] தமிழ் மாநிலக்குழு சார்பில் தீக்கதிர் அச்சகத்தில் [6/16 பைபாஸ் ரோடு மதுரை 625018] அச்சிட்டு வெளியிடுபவர் ஆசிரியர் எம் ஆர் வெங்கட்ராமன்.

ஆசிரியருக்கு...

கடன்வசூல் ஒத்திவைக்கப்படுமா ?

ஐயா,

மதுரை மாவட்டம் திருமங்கலம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மேலக்கோட்டை, நடுக்கோட்டை, கீழெக்கவுண்டன்பட்டி, கீழகோட்டைலெட்சுமிபுரம் மலப்பட்டி, காமாட்சிபுரம், ராயபாளையம் மீனாட்சிபுரம், கரிசல்பட்டி, மைசகுடி ஆகிய கிராமங்கள் 1975 ஆம் ஆண்டு பருவ மழை தவறியதால் கண்மாய்கள வறண்டு போய் நஞ்சைப் பயிர்கள் சாகுபடி ஆகவில்லை மேலும, வானம்பாரி பயிர்களான புஞ்சைததானியப் பயிர்கள் பசசாலை என்ற பூச்சித்தாக்குதலின் காரணமாயும் மழை பெய்யாத காரணததாலும் பயிர்கள் பச்சை நிறத்தைக் கண்களுக்குக் காட்டிவிட்டு கதிர்களும் பயறு வகைகளும் அடியோடு பாதித்து விட்டன. புஞ்சை விளைச்சலோ 10 சதவீதத்துக்கும் குறைவுதான், நஞ்சை விளைச்சலோ பூஜ்யம்.

எனவே, ஏழை விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் நலன் கருதி-இப்பகுதியில் அவர்கள் [illegible] கூட்டுறவு சங்கங்களி[illegible] வங்கியுள்ள கடன்களை வசூல் செய்வதை நிறுத்தி வைத்து அடுத்த மகசூலில் (1977) வசூலிக்கும்படியும் குறுகிய காலக்கடன்களை நீண்ட காலக்கடன்களாக மாற்றும்படியும், 1976 ஆம் ஆண்டு விவசாய உற்பத்திக்கு புதிய விவசாயக்கடன் வழங்கும்படியும் தமிழக அரசைக்கோருகிறோம்.

மேலும் இப்பகுதியில் குடிநீர்பஞ்சம் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. எனவே, இப்பகுதியை வறட்சிப்பகுதியாக மீண்டும் அறிவிக்க வேண்டும் என்றும், குடிநீர்க்கிணறுகளை ஆழப்படுத்தவேண்டும் என்றும், விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த தககாவிககடன் வழங்க வேண்டும என்றும சகல விவசாயிகளுக்கும் வரி வஜா அளிக்க வேண்டும் என்றும் அரசிடம்பெற்றுள்ள எல்லாவித கடன்களையும் ஓராண்டு காலத்துக்கு ஒத்திப்போடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்
மேற்படி கிராமப் [illegible] பொதுமக்களும் [illegible] சியினரும்

இரு காங்கிரஸ் இணைப்புக்கு எதிர்ப்பு

சாத்தூர், டிச.20—

முகவைமாவட்டம் சாத்தூர் நகர, வட்டார சிவாஜி கணேசன்மன்றங்கள் கலைக்கப்பட்டு விட்டதாக அம்மன்றங்களின் நகர, தாலுகா அமைப்பாளர்கள் தட்டிகள் மூலமஅறிவித்துள்ளனர்.

ஸ்தாபனக் காங்கிரஸ் தொண்டர்களின் கருத்துக்கு மாறுபாடாகவும், இரு காங்கிரஸ் இணைப்புக்கு ஆதரவுதரும் வகையிலுமசிவாஜி கணேசனும், சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத் தலைவர் சின்ன அண்ணாமலையும் செயல்படுவதற்கும அறிக்கைகள் விடுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தே இந்த கலைப்பு நடவடிக்கை என்றும் அத்தட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இளைஞர்கள் எதிர்ப்பு

இதே போல், இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் குடந்தை இராமலிங்கத்துக்கும், இங்குள்ள இளைஞர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

காமராஜ் அஸ்தியைக் கரைத்த மறுநிமிடமே அவரது இலட்சியத்தையும் குழிதோண்டிப்புதைத்து விட்டதாகவும், பதவிக்காகவும், பணத்துக்காகவுமே இந்திரா காங்கிரசுடன் இணைய துடிப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

கோவை— நீலகிரி மாவட்டத்தில் மணவாளன் குழு நிகழ்ச்சிகள்

டிச. 12, 13 திருப்பூர்
14 கோசனம்
15 சிறுமுகை
16, 17 கோவை தாலுகா (வடக்கு)
18,19— கோவை நகர்
20 சிங்காநல்லூர்
21 கோவை தாலுகா (தெற்கு)
22 கோவை தாலுகா (வடககு]
23, 24 உடுமலை

மதுரை
பழங்காநத்தத்தில்
13—12—75 மாலையில்
தோழர்கள்
நெல்லை பி. சொரணம்
மா. முனியாண்டி
மற்றும் பலர் பேசுவர்

அரசியல் பிரச்சார கலை நிகழ்ச்சி

விக்கிரமசிங்கபுரம், டிச.10—

நெல்லை மாவட்டம விக்கிரமசிங்கபுரம் மூன்றுலாம்ப் திடலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் பஞ்சாலை தொழிலாளர் சங்கய சார்பிலும கடந்த 7-ந் தேதி அன்று அரசியல்நிலை விளக்கப் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர் கருப்பசாமி தலைமை வகித்தார்.

மணவாளன் குழு இன்னிசை

இன்றைய அரசியல் நிலை, போனஸ்துறைப்பு அவசரச் சட்டம, தொழிலாளர்களை மேலும்மேலும்சுரண்டமில முதலாளிகள புரியும சதிகள் முதலியவற்றை விளக்கி மாவட்ட சிஐடியூ தலைவர் பி. சொரணம், எஸ். ஆண்டி, சி என். வாசுதேவன, எஸ் அழகு ஆகியோர் பேசினர். இறுதியில் மதுரை தியாகி மணவாளன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது.

எஸ் கே மறைவுக்கு அஞ்சலி

தமிழக சிஐடியூ துணைத் தலைவர் தோழர் எஸ் கிருஷ்ணமூர்த்தி அவர்களின மறைவுக்கு இக்கூட்டத்தில் அஞ்சலி தெரிவிக்கப்பட்டது.

தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு ஊதிய—பஞ்சப்படி உயர்வுகள் கேட்பதில்லையாம்

ஆதிமூலத்தின் துரோகத்துக்கு எஸ். ஏ. தங்கராஜன் கண்டனம்

திண்டுக்கல், டிச. 10—

தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வோ, பஞ்சப்படி உயர்வோ கேட்பது இல்லை என்றும், ஐந்து புள்ளிகள் உயர்ந்தால் மட்டும் ஐந்துகாசு பஞ்சப்படி என்றும் திரு ஆதிமூலம் என்பவர் தலைமையிலான சுயேட்சை சங்கம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம படு கேவலமானதும், தொழிலாளர்களுக்குத் துரோகமானதும் ஆகும் என்று தோல் பதனிடும் தொழிலாளர் கூட்டு இயக்கத்தின் செயலாளர் தோழர் எஸ் ஏ தங்கராஜன் அறிவித்துள்ளார். அவர்விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

அனைத்துச் சங்க முடிவு

தோல் பதனிடும்தொழிலாளர்களின் சமபளம், பஞ்சப்படி பிரச்னைகள் சம்பந்தமாக கடந்த ஓராண்டு காலமாக சிஐடியூ, ஏஐடியூசி, திமுக, ஐ என் டி யூ சி போன்ற சங்கங்களும், வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சுயேட்சை சங்கத் தலைவர் திரு ஆதிமூலமும சேர்ந்து கூட்டு இயக்கம் நடத்தியதை அறிவீர்கள்.

இந்தக் கூட்டு இயக்கத்தின் விளைவாகதொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தை நடந்தது.

நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ 1-50 சம்பள உயர்வு தருவது என்றும்,

முன்பணமாக ரூ 30, ரூ 50 தருவது என்றும்,

இதர கோரிக்கைகளை நடுவர் தீர்ப்புக்கு விடுவது என்றும்,

மீண்டும் 15-10-75-ந் தேதி கூடி முடிவு செய்வது என்றும் சிபாரிசு செய்து இணை ஆணையர் உத்திரவிட்டார்.

அதன்படி முதலாளிகளும் முன்பணம் கொடுத்து விட்டனர். இணை ஆணையர் சிபாரிசுப்படி மீண்டும் அக். 15-ந் தேதி சந்தித்த போது, சிபாரிசுகளை ஒப்புக்கொள்ள முடியாது என்று முதலாளிகள் கூறிவிட்டனர். எனவே 24-10-75 முதல் வேலை நிறுத்தம் செய்வது என்று அனைத்துச் சங்கங்களும் முடிவு செய்தன.

துரோக ஒப்பந்தம்

ஆனால் ஊருக்குத் திரும்பியதும், திரு ஆதிமூலம், தான் தனியாகப் பேசிமுடிக்கப் போவதாகவும், எனவே, கூட்டு முடிவுப்படி வேலை நிறுததம் சாத்தியமில்லை—மன்னிக்கவும என்றும் கடிதங்கள் எழுதிவிட்டார். அதன் பின்பு நிர்வாகத்துடன்—மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வோ, பஞ்சப்படி உயர்வோ கேட்பது இல்லை என்றும், ஐந்து புள்ளி உயர்ந்தால் மட்டும 5 பைசாபஞ்சப்படிஎன்றும் ஒப்பந்தம ஒன்றை செய்துவிட்டார். நண்பர் ஆதிமூலத்தை நாம்அறிவோம். இது அவரது பழக்க வழக்கம், தொடர்ந்து செய்து வரும் காரியம்தான்.

அதைத் தொடர்ந்து வலது கம்யூனிஸ்ட்சார்பான ஏ ஐ டி யூ சி, திமுக சங்கங்களும் நாம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அதையும் மீறி ஒப்பந்தம் செய்து விட்டன. திண்டுக்கல், வாணியம்பாடி முதலிய இடங்களில் நமது சி[illegible] சங்கம்கையெழுத்துப்போடவில்லை.

சிந்தித்து செயல்படுக

எனவே, இனியும் இது போன்ற துரோகம் நடக்க விட தொழிலாளர்கள் அனுமதிக்கலாகாது. திரு ஆதிமூலம்சங்கத்தின் கீழும், ஏஐடியூசி, திமுக சங்கங்களின் பின்னும் அணி திரண்டுள்ள தொழிலாளர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும் என்றும், தங்களது சங்கத் தலைமைகளைத் திருத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் சங்க தோழர்கள் மீது தாக்குதல் -மிரட்டல் இருவர் மீது போலீசில் புகார்

இரணியல், டிச. 10—

குமரி மாவட்டம் கல்குளம் தாலுகா, பரசேரியில் விவசாயிகள் சங்கத் தோழர்கள் எம். மணி, இ. மெய்யல் ஆகிய இருவரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

விவசாயிகளின் நியாயமான பிரச்சினைகளில் விவசாயிகள் சங்கத் தோழர்கள் முன்னணியில்நிற்பதுகண்டு ஆத்திரமுற்ற சில நிலச்சுவான்தார்களது தூண்டுதலின் பேரில்தான் குண்டர்கள் இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக பி. வேணுகோபாலன் என்ற நபர் மீதும், அந்த நபரின் எடுபிடி ஆள் என்று கூறப்படும் மணி என்ற நபர் மீதும் இரணியல் போலீஸ் நிலைய சப் - இன்ஸ்பெக்டரிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

மதுரையில் புதியரேஷன் கார்டுகள் வழங்க ஏற்பாடு

மதுரை, டிச. 9—

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் புதியகுடும்பக்கார்டுகள் வழங்கப்படவிருப்பதாக மாவட்டக் கலெக்டர் அறிவித்துள்ளார்.

இதற்காக அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும், இவர்கள் 7 ந் தேதி முதல் 15 ந் தேதி முடிய காலையிலும் மாலையிலும் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்பார்கள் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

பாலஸ்தீன நாடு அமைப்பதற்கு இஸ்ரேல் அமைச்சரவைக்குள் ஆதரவு

வாஷிங்டன், டிச. 9—

பாலஸ்தீன நாட்டு மக்களுக்கு தனிநாடு கொடுக்க கூடாது என விடாப்பிடியாக இருந்து வரும் இஸ்ரேல் அரசாங்கக் கொள்கைக்கு அதன் அமைச்சரவையிலேயே கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. முக்கியமான அமைச்சர்களே தற்போது பாலஸ்தீன மக்கள் சம்பந்தமாக இஸ்ரேல் அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனராம்,

இஸ்ரேல் பிரதமர் ராபின், பாலஸ்தீனம் சம்பந்தமாக கடை[illegible] முரடான [illegible]

களில் குறைந்தது 8 பே[illegible] னும் எதிர்க்கின்றனர் எ[illegible] "வாஷிங்டன் போஸ்ட்[illegible]" எனும அமெரிக்க பத்திரிகை[illegible] கூறுகிறது.

இஸ்ரேலின் வெ[illegible] நாட்டு அமைச்சர் [illegible] லென், நிதி அமைச்[illegible] ராபினோ விட்ஜ் வீட்டு வ[illegible] அமைச்சர் பெர், நீதித்து[illegible] அமைச்சர் ஜாட் ஆகியே[illegible] பிரதமரின் கொள்கை[illegible] எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் உள்ளனர்.

இவர்க[illegible] மக்களுக்கு[illegible]